RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

DOI: 10.54392/ijot2623

# The Musical Heritage of the Tevaram: An Analysis of Traditional Tamil Instruments

**K. Varusakkani [a, *], F. Vincent Rajasekar [a]**

[a] Lakshmi College of Education, Gandhigram-624302, Tamil Nadu, India
*Corresponding author Email: kvkani2016@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2623
Received: 05-02-2026; Revised: 15-04-2026; Accepted: 21-04-2026; Published: 03-05-2026

**Abstract:** The Tevaram hymns occupy a prominent place in Tamil devotional literature, serving not only as expressions of profound Saivite devotion but also as valuable records of the cultural, artistic, musical, and social life of the Tamil people. Beyond their spiritual significance, these hymns preserve important evidence of the rich musical traditions that flourished in ancient Tamil society. In particular, the references to musical instruments found in the Tevaram provide significant insights into the development of temple music, ritual performances, and the evolution of Tamil musical culture. This study aims to examine the musical instruments mentioned in the Tevaram hymns composed by the three great Saivite saints Tirugnanasambandar, Tirunavukkarasar (Appar), and Sundarar. The study identifies and analyzes references to traditional instruments such as the yazh (lute), muzhavu (drum), murasu (war and ceremonial drum), kuzhal (flute), and thslam (cymbals). It further explores their roles in temple worship, religious festivals, dance performances, and various ritual practices, demonstrating how music functioned as an integral component of devotional expression. The musical instruments described in the Tevaram not only illustrate the antiquity of Tamil musical traditions but also reveal the growth of a temple-centred musical culture that significantly influenced the evolution of South Indian devotional music. Through literary analysis, this article demonstrates that the Tevaram hymns constitute an invaluable source for reconstructing the history of Tamil music, preserving indigenous musical knowledge, and understanding the cultural heritage of the Tamil people.

**Keywords:** Tevaram, Ancient Tamil Musical Instruments, Temple Musical Heritage, Temple Arts, Indian Knowledge System, Tamil Temples

# தேவாரப்பாடல்களில் இடம்பெற்றுள்ள பழந்தமிழ் இசைக்கருவிகள்

**கே. வருசக்கனி [அ *], பி. வின்சென்ட் ராஜசேகர் [அ]**

[அ] இலட்சுமி கல்வியியல் கல்லூரி, காந்திகிராமம்-624302, தமிழ்நாடு, இந்தியா

## முன்னுரை

பழங்காலத்தில் இசைகளை குரலால் இசைப்பதோடு கருவிகளாலும் மீட்டனர். குரலால் பாடுவதும் இசைக்கருவிகளால் இசைப்பதும் எல்லாம் ஒருங்கேயும் நிகழும். குரலின் வழியே இசைக்கருவிகள் வாசிக்கப்படும். இசைக்கருவிகளில் பல வகைகள் உண்டு. ஆயினும் அவை ஒன்றின் வழியே ஒன்று மிக இசைவாக ஒத்து நிகழ்வும் மக்களின் மனதிற்கு எழுச்சியை தருவதை இசைக்கருவிகள் கருவிகளில் தோல், நரம்பு, காற்று, கஞ்சக் கருவிகள் போன்றவற்றின் பயன்பாடுகள் பழந்தமிழர் பண்பாட்டில் இருந்து வந்தன எனும் நோக்கில் தொல்காப்பியத்தில் தமிழிசை குறித்த இலக்கணங்கள் ஐந்திணைக்குரிய பண்களும் காலமும் இலக்கியத்தில் இசைக்கருவிகள் திருமுறைகளில் இடம்பெறும் இசைக்கருவிகளின் வகைகள், தோல் கருவிகள், காற்று கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக் கருவிகள் போன்றவைகள் தமிழர் வாழ்வியலோடு இயைபுப்படுத்தி அவற்றின் அமைப்பும் சிறப்பும் தனித்துவங்களும் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## தொல்காப்பியத்தில் தமிழ் இசை

பழந்தமிழ் இலக்கண நூல்களுள் முழுமையாக கிடைக்கும் நூல் தொல்காப்பியம். இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்ற தமிழ் இலக்கணம் கூறும் நூல் இதுவாகும். இசைத்தமிழ் தொடர்பான செய்திகளை இந்நூல் ஆங்காங்கு கூறுகிறது. தமிழிசை பற்றிய நூல்களில் இன்று கிடைக்க பெறுகின்ற மிகத் தொன்மையான நூல் தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பியர் காலம் என்பது கிமு 8 ஆம் நூற்றாண்டளவிலானது என்பது அறிஞர்கள் கருத்தாகும்.

இந்நூலின் காலக்கணிப்பு தமிழர் இசையின் தொன்மையை உறுதிப்படுத்தும். இருவகை இசை, இசைக்கருவிகள் பற்றி தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. ஒன்று தொழிலிசை, மற்றையது இன்ப இசை, தொழில் இசை கருவி பறை என்றும் இன்ப இசைக்கருவி யாழ் என்றும் குறிப்பிடுகிறது. ஒவ்வொரு திணைகளுக்கும் உரிய தொழில் இசை இன்ப இசை பற்றியும் இது குறிப்பிடுகிறது.

அசையும் சீரும்

இசையோடு சேர்த்து

வகுத்தனர் உணர்த்தும்

வல்லோர் ஆறே (தொல்.பொருள்.நூ.345)

அளபு இறந்து இசைத்தலும்

ஒற்று இசை நீடலும்

உள என மொழிப

இசையோடு சிவணிய

நரம்பின் மறைய

என்மனார் புலவர்........................ (தொல்.எழுத்து.நூ.38)

இசையொடு பொருந்திய யாழ், நூலில் இசையிலே எழுத்து ஒலிகள் அளவு கடந்து ஒலித்தலும் ஒற்றுக்கள் நீண்டு ஒலித்தலும் உண்டு என்று அறிஞர் கூறுவர் என்பது இதன் பொருளாகும். இசையை தொழிலாக கொண்ட மக்கள் உபயோகப்படுத்தும் இசைக்கருவிக்கு பறை என்றும் இன்பமாக பொழுதுபோக்கும் மக்கள் பயன்படுத்தும் இசைக்கருவி யாழ் என்றும் தொல்காப்பியத்தில் இருவகை இசை கருவிகளை பற்றி குறிப்பிடுகின்றார் தொல்காப்பியர் (வேங்கடசாமி,சீனி.ப.81).

தொல்காப்பிய பொருளதிகாரம் அகத்திணையில் 18ம் நூற்பா தமிழர் வாழ்க்கை நெறியின் அடிப்படை பண்பாட்டுக் கருவூலங்களை குறிப்பிடுகிறது.

"தெய்வ முணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவுங் கருவென மொழிப"................ (தொல்.பொருள்.நூ.18)

இவற்றில் தெய்வம், உனா, மா, மரம், புள், பறை, யாழ் ஆகிய பொருட்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த ஏழும் தமிழர் பண்பாட்டு கருப்பொருட்கள் ஏழு கருப்பொருட்களுள் ஒன்று இசையாகிய யாழ் மற்றொன்று பறை எடுத்துக்காட்டப்படுகின்றன.

## திருமுறைகளில் இடம்பெறும் இசைக்கருவிகள்

ஆகுளி, இடக்கை, இலயம், உடுக்கை, ஏழில், கத்திரிகை, கண்டை, கரதாளம், கல்லலகு, கல்லவடம், கவிழ், கழல், காளம், கிணை, கிளை, கிண்ணாரம், குடமுழா, குழல், கையலவு, கொடுகொட்டி, கொட்டு, கொம்பு, சங்கு, கொக்கரை, சச்சரி, சலஞ்சலம், சல்லரி, சிரந்தை, சிலம்பு, சின்னம், தகுனிச்சம், தக்கை, தடாரி, தட்டழி, தத்தளகம், தண்டு, தன்னுமை, தமிருகம், தாரை, தாளம், துத்திரி, துந்துபி, துடி, தூரியம், திமிலை, தொண்டகம், நரல், சுரிசங்கு, படகம், படுதம், பணிலம், பம்பை, பல்லியம், பறண்டை, பறை, பாணி, பாண்டில், பிடவம், பேரிகை, மத்தளம், மணி, மருவம், முரசு, முரவம், முறுகியம், முருடு, முழவு, மொந்தை, யாழ், வட்டளை, வீணை, வீளை மற்றும் வெங்குரல் ஆகியவை தமிழின் பல்வேறு இசைக்கருவிகளின் பெயர்களாகும்.

## தோல் இசை கருவிகள்

பெரும்பறை, சிறுபறை, பெருமுரசு, பேரிகை, படகம், பாடகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, தூடிகை, திமிலை, தக்கை, கணப்பறை, தமடூகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, முரசு, சந்திர வளையம், மொந்தை, பாதம், உபாங்கம், துடி, நாளிகைப்பறை, தமுக்கு, உறுமி மேளம், பறை,

தம்பட்டம், தமருகம், நகரா, மண்மேளம், தவண்டை, ஐம்முக முழவம், நிசாளம், துடுமை, அடக்கம், தருணீச்சம், தூம்பு, பேரிமத்தளம், கண்விடு, துடுகை, உடல், உருட்டி, துன்னை, அரைச்சட்டி, கொடுகொட்டி, அந்தலி, அமுதகுண்டலி, அரிப்பறை, ஆருளி, ஆமந்தரிகை, ஆவஞ்சி, உடல் உடுக்கை, எல்லரி ஏறங்கோள் கோதை, கண் தூம்பு, கணப்பறை கண்டிகை, கல்லல் கிரிகட்டி, குண்டலம் சட்டை, செண்டா, சிறுபறை, தகுனித்தம், தட்டை, தடாரி, பதவை, குளிர், கிணை, துடி, பம்பை ஆகியவை தமிழின் பாரம்பரிய இசைக்கருவிகள் மற்றும் மேள வகைகளின் பெயர்களாகும். மேற்கண்ட இசைக்கருவிகளையும் அவற்றின் பயன்பாடுகளையும் தமிழர்களின் வாழ்வியலின் வழி அறிய முடிகின்றது.

## ஆகுளி

"வெல் படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்

கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்

சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி

கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும்" ............(பெரியபுராணம்:12. 654)

ஆகுளி என்பது ஒருவகை கைச்சிறுபறையாகும். இந்த தாளவிசைக்கருவி முழவுக்கு இணையாகவும் துணையாகவும் அமையும். துடி - கொம்பு - ஆகுளி இவை மூன்றும் ஐவகை நிலங்களில் குறிஞ்சித்திணைக்குரிய இசைக்கருவியாக குறிப்பிடப்படுகின்றன.

## கையலகு

கையலகு என்ற பழந்தமிழர் இசைக் கருவி பற்றிய குறிப்பு பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளது

நீறேறு திருமேனி நிகழக் கண்டேன்

நீள்சடைமேல் நிறைகங்கை யேறக் கண்டேன்

கூறேறு கொடுமழுவாள் கொள்ளக் கண்டேன்

கொடுகொட்டி கையலகு கையிற் கண்டேன்

ஆறேறு சென்னியணி மதியுங் கண்டேன்

அடியார்கட் காரமுத மாகக் கண்டேன்

ஏறேறி இந்நெறியே போதக் கண்டேன்

இவ்வகையெம் பெருமானைக் கண்ட வாறே.......................(பெரியபுராணம்:6.97.8 )

என்று சேக்கிழார் விளக்குகிறார்

## கொடுகொட்டி

கொடுகொட்டி என்பது தோற்கருவி வகை சார்ந்த தமிழர் இசைக் கருவிகளுள் ஒன்றாகும். இது ஒருவகை பறை எனும் முழவு கருவியாகும். இதனை பற்றிய குறிப்புகள் சிலப்பதிகாரத்திலும் தேவாரத்திலும் உள்ளன. நாகசுர கச்சேரிகளிலும் இடம்பெறுகிறது. இது இரு கருவிகள் இணைந்து இசைக்கருவிகள் அடியில் குறுகி முகம் படர்ந்த இக்கருவிகள் இரண்டில் நடுப்புறமும் ஒன்றாக பிணைக்கப்பட்டிருக்கும். ..(19) பொய்க்கால் ஆட்டம், பூம்பூம் மாட்டுக்காரர்கள், உருமியிசை, மாட்டுக்கல்யாண கூத்து போன்றவற்றில் இக்கருவி இசைக்கப்படுகிறது.

குரவ னார்கொடு கொட்டியுங் கொக்கரை

விரவி னார்பண் கெழுமிய வீணையும்

மருவு நாண்மலர் மல்லிகை செண்பகம்

பரவு நீர்ப்பொன்னிப் பாலைத் துறையரே............ (திருநாவுக்கரசர்:5.51.7 )

வெங்கண் வாளர வாட்டி வெருட்டுவர்

அங்க ணாரடி யார்க்கருள் நல்குவர்

செங்கண் மாலயன் தேடற் கரியவர்

பைங்கண் ஏற்றினர் பாலைத் துறையரே. ................(திருநாவுக்கரசர்:5.51.10 )

மேற்கண்ட பதிவுகளை பன்னிரு திருமுறை வரலாற்றின் வழி அறியலாம்.

## கொம்பு

கொம்பு எனப்படுவது ஒரு தூம்பு வகை தமிழர் காற்று இசைக்கருவி நாட்டுப்புற இசையிலும் கோவில் இசையிலும் கொம்பு இசைக்கருவி பயன்படுகிறது. கொம்பு பண்டைய காலத்தில் விலங்குகளின் கொம்புகளை பயன்படுத்தியும் பின்னர் மூங்கிலாலும் தற்காலத்தில் உலோகத்தாலும் செய்யப்படுகிறது. தற்போதுள்ள வெண்கலம், பித்தளை போன்ற உலோகங்களில் கொம்பு செய்யப்படுகிறது. பித்தளையால் செய்யப்பட்ட கொம்பை விட வெண்கல வார்ப்பினால் செய்யப்பட்ட கொம்பில் ஒலி அதிர்வு கூடுதலாக இருக்கும்.

வெல் படைத் தறுகண் வெஞ்சொல் வேட்டுவர் கூட்டம் தோறும்

கொல் எறி குத்து என்று ஆர்த்துக் குழுமிய ஓசை அன்றிச்

சில்லரித் துடியும் கொம்பும் சிறு கண் ஆகுளியும் கூடி

கல் எனும் ஒலியின் மேலும் கறங்கிசை அருவி எங்கும் ............(பெரியபுராணம்:12.654)

சங்க நாதங்கள் ஒலிப்பத் தழங்கு பொன் கோடு முழங்க

மங்கல வாழ்த்து உரை எங்கும் மல்க மறை முன் இயம்பத்

திங்களும் பாம்பும் அணிந்தார் திருப்பதி எங்கும் முன் சென்று

பொங்கிய காதலில் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார்............ (பெரியபுராணம்:12.289)

கொம்பு இசைக்கருவி சுமார் நான்கு முதல் ஆறு அடி வரை இருக்கும் இதை இசைக்கும் கலைஞர்கள் தங்கள் முழு பலத்தையும் பயன்படுத்தி அடிவயிற்றில் இருந்து ஊதுவதன் மூலம் யானை பிளிறுவது போன்று ஓசை கொம்பில் உருவாகிறது. அக்காலத்தில் மன்னர் வெளியே வந்தாலும் போரில் வெற்றி பெற்றாலும் கொம்பு ஊதப்பட்டுள்ளது. தமிழர்களின் பாரம்பரிய இசைக் கருவியான கொம்பு தற்போது சில கோவில் விழாக்களில் மட்டுமே வாசிக்கப்படுகிறது.

## சங்கு

சங்கு என்பது ஒரு காற்று இசைக்கருவி. தமிழர் மற்றும் இந்திய இசையில், பண்பாட்டிலும், கோவில் வழிபாட்டின் போதும் பயன்படுகிறது. இந்து சமய வைணவ கடவுளான விஷ்ணுவின் சின்னமாக சித்தரிக்கப்படுகின்றது. தமிழ்நாட்டு சிவன் கோவில்களில் சுவாமி வழிபாட்டில் சேகண்டியுடன் சங்கொலியும் இசைக்கப்படுகிறது. திருஞானசம்பந்தர் சென்ற இடங்களில் எல்லாம் சங்க நாதம் முழங்கியதாக பெரிய புராணத்தில் குறிப்புகள் உள்ளன. சிவன் அடியார்கள் இந்த இசை கருவியை பஞ்ச வாத்தியம் என்றும் கைலாய வாத்தியம் என்றும் அழைக்கின்றனர்.

1 வலம்புரி சங்கு

2 வெண் சங்கு

3 சேகண்டி

மேற்கண்ட வகைகளாகவும் சிறப்புற்று விளங்குகின்றன.

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே

அங்கிடு பலிகொளு மவன்கோபப்

பொங்கர வாடலோன் புவனியோங்க

எங்குமன் இராமன தீச்சுரமே.............................................. (திருஞானசம்பந்தர்: 1.115.1)

சங்கொலி இப்பிசு றாமகரந் தாங்கி நிரந்து தரங்கம்மேன்மேற்

பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப் புகலி நிலாவிய புண்ணியனே

எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மான் எம்மிறையேயிது வென்கொல் சொல்லாய்

வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (திருஞானசம்பந்தர்:1.4.6)

## சலஞ்சலம்

ஆயிரம் இடம் வரை சங்குக்கு இணையானது ஒரு வலம்புரி ஆயிரம் வலம்புரிக்கு ஒரு சலஞ்சலம் ஆயிரம் சலஞ்சலத்துக்கு நேரானது ஒரு பாஞ்சசன்யம் என்ற கருத்துக்கள் நிகண்டுகளில் கூறப்பட்டுள்ளன. சலஞ்சலத்தின் உள்ளே வெள்ளி நிறத்தில் இருக்கும் மூன்று கோடுகள் மும்மூர்த்திகளை குறிக்கும் என்று சில சமஸ்கிருத நூல்கள் சொல்கின்றன

கருங்கடக் களிற்றுரிக் கடவுள திடங்கயல்

நெருங்கிய நெடும்பெணை அடும்பொடு விரவிய

மருங்கொடு வலம்புரி சலஞ்சலம் மணம்புணர்ந்

திருங்கடல் அணைகரை இடம்வலம் புரமே..............(சுந்தரர்:7.72.6)

நலம்பெரியன சுரும்பார்ந்தன நங்கோனிடம் அறிந்தோம்

கலம்பெரியன சாருங்கடற் கரைபொருதிழி கங்கைச்

சலம்புரிசடை முடியுடையவர்க் கிடமாவது பரவை

வலம்புரியொடு சலஞ்சலங்கொணர்ந் தெற்றும்மறைக் காடே...........(சுந்தரர்:7.71.8)

மேற்கண்ட திருமுறைகளின் வழி சலஞ்சலம் பழங்கால இசைக் கருவி குறித்த கூறுகளை அறியலாம்.

## சிலம்பு

சிலம்பு என்பது சங்க கால தென்னிந்திய மக்களால் இரண்டு கால்களிலும் அணியப்பட்ட அணிகலனாகும். கண்ணகியின் கால்களில் அணிந்திருந்த சிலம்பை கொண்டு இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் என்ற பெருங்காப்பியத்தை இயற்றினார். இந்நூல் தமிழ் தாயின் கால்களில் அணிந்திருந்த சிலம்பை குறிப்பதாகவும் கூற காணலாம். சங்ககாலத்தில் ஆண் பெண் என்று இருபாலரும் இதை அணிந்தனர். இதற்கு அக்கால இலக்கியங்களே சான்றாகும். பெரும்பாலும் தங்கத்தால் செய்யப்பட்ட அணிகலன் வட்டமான வடிவத்தில் குழல் போன்று இருக்கும். இதன் உட்புறம் விலை உயர்ந்த மணிகளால் நிரப்பப்பட்டிருக்கும். இதன் பொருட்டு இவ்வணிகலன் நடக்கும் போது ஒருவித இனிய ஒலியை எழுப்பும். நாட்டிய பெண்களால் அணியப்படும் சிலம்பானது ஆடும் போது தாளத்திற்கு ஏற்ப ஒலி எழுப்ப வல்லதாகும்

குழலார்சடையர் கொக்கின்இறகர் கோலநிறமத்தந்

தழலார்மேனித் தவளநீற்றர் சரிகோவணக்கீளர்

எழிலார்நாகம் புலியினுடைமேல் இசைத்துவிடையேறிக்

கழலார்சிலம்பு புலம்பவருவார் சித்தீச்சரத்தாரே (திருஞானசம்பந்தர்:1.71.7)

அம்பலத்தில் ஆடுகின்ற நடராஜப் பெருமானும் தன் கால்களில் சிலம்பொடு இருப்பது இவ்வணிகலனிற்கு மேலும் பெருமை சேர்க்கின்றது

என தொடங்கும் தேவார பதிகத்தில் கழல் என்பது ஆண்கள் அணியும் சிலம்பு வகையினையும் சிலம்பு என்பது பொதுவாக பெண்களாலேயே அணியப்படும் அணிகலன் வகையினையும் குறித்து நிற்கிறது.

## தகுணிச்சம்

திருமுறைகளில் தகுணிச்சம் எனும் இசைக்கருவியின் தனித்துவங்கள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

விலகினார் வெய்ய பாவம்

விதியாலருள் செய்து நல்ல

பலகினார் மொந்தை தாளஞ்

தகுணிச்சமும் பாணியாலே

அலகினால் வீசிநீர் கொண்

டடிமேல் அலரிட்டு. (திருஞானசம்பந்தர்: 3.57.6)

தக்கை தண்ணுமை

தாளம் வீணை
தகுணிச்சங்கிணை சல்லரி
கொக்கரை குட முழவினோடிசை ....... (சுந்தரர்: 7.36.9)

மேற்கண்ட திருமுறை பாசுரங்கள் வழி தகுணிச்சம் இசைக்கருவி பற்றி அறிய முடிகிறது.

தட்டழி

இது தோலிசை கருவிகளில் ஒன்று. திருச்செந்துறை கோவில் கல்வெட்டு குறிக்கிறது.

விச்சா தரர்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர் - எச்சார்வும்
சல்லரி தாளந் தகுணிதந் தத்தளகம்
கல்லலகு கல்ல வடம்மொந்தை - நல்லிலயத்
தட்டழி சங்கஞ் சலஞ்சலந் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் - கொட்டும்
குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம் - இடவிய
மத்தளந் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப - ஒத்துடனே
மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத் ...............................(பெரியபுராணம்11.300)

என்று பதினோராம் திருமுறை விளக்குகின்றது.

துந்துவி

பழங்கால இசைக்கருவிகளில் ஒன்று துந்துபி இசைக்கருவியாகும்.

சங்கொடு தாரை காளம் தழங்கொலி முழங்கு பேரி
வெங்குரல் பம்பை கண்டை வியன் துடி திமிலை தட்டி
பொங்கொலிச் சின்னம் எல்லாம் பொரு படை மிடைந்த பொற்பின்
மங்குல் வான் கிளர்ச்சி நாண மருங்கு எழுந்து இயம்பி மல்க.............(பெரியபுராணம்: 12.581)

## தூரியம்

இது பழந்தமிழர் இசைக்கருவிகளுள் ஒன்றாகும்

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரணம் நீடுக தூரியம் ஆர்க்கதொன் மால்அயற்கும்
காரணன் ஏரணி கண்ணுத லோன்கடல் திலலையன்ன
வாரண வும்முலை மன்றலென்(று) ஏங்கும் மணமுரசே............. (மாணிக்கவாசகர்:8.296)

என்று திருகோவையார் தூரியம் இசைக்கருவி பற்றி எடுத்துரைக்கிறது.

## படகம்

இது ஒரு வகை இசைக்கருவி ஆகும்

அம்கண் விழவில் பெருகு சண்பை அகல் மூதூர்ச்
சங்கம் படகம் கருவி தாரை முதலான
எங்கணும் இயற்றுபவர் இன்றியும் இயம்பும்
மங்கல முழக்கு ஒலி மலிந்த மறுகு எல்லாம்.................... (பெரியபுராணம்:12.1931)

என்று பன்னிரெண்டாம் திருமுறையும் படகம் இசைக்கருவி பற்றி விளக்குகிறது.

படுதம்

பழந்தமிழர் இசை கருவிகளில் ஒன்றாகும்

கரிந்தார் இடுகாட்டி லாடுங் கபாலி

புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்

தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்

விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே............................. (திருஞானசம்பந்தர்; 1.134.5)

என்று முதலாம் திருமுறை படுதம் இசைக்கருவி பற்றி குறிப்பிடுகிறது.

## பறண்டை

பாடும் பறண்டையு மாந்தையு மார்ப்பப் பரந்துபல்பேய்க்

கூடி முழவக் குவிகவிழ் கொட்டக் குறுநரிகள்

நீடுங் குழல்செய்ய வையம் நெளிய நிணப்பிணக்காட்

டாடுந் திருவடி காண்கஜ யாறன் அடித்தலமே................. (திருநாவுக்கரசர்: 4.92.9)

என்று நான்காம் திருமுறையின் வழி பறண்டை இசைக்கருவி பற்றி அறிய முடிகிறது.

பிடவம்

பிடவம் என்பது திருமுறைகளின் வழி இசைக்கருவி என்று அறிய முடிகிறது பழங்கால புதர்ச்செடி ஒன்றிற்கும் இப்பெயர் உண்டு எனலாம்

பீடுலாந் தனைசெய்வார் பிடவ மொந்தை

குடமுழவங் கொடுகொட்டி குழலு மோங்கப்

பாடலா ராடலார் பைங்க ணேற்றார்

பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே................. (திருநாவுக்கரசர்: 6.10.2)

என்று ஆறாம் திருமுறை விளக்குவதை அறியலாம்.

## பேரிகை

பேரிகை என்பது தகவல் தெரிவிக்க பயன்பட்ட ஒரு இசைக் கருவியாகும் இந்த இசைக்கருவி தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்தில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது அரசனுடைய கட்டளை செய்தி திருமண செய்தி ஊர்வலம் முதலிய தகவல்களை நகரில் இருப்பவர்களுக்கு அறிவிக்க இந்த இசை கருவியை பயன்படுத்தி இருக்கின்றனர்

தமிழ்நாட்டில் தொன்மையான பேரிகைகள் கொங்கு பகுதிகளில் காணப்படுகிறது கொங்கு பகுதி திருமணங்களில் இசைக்கப்படும் கனகதப்பட்டை எனப்படும் பல்லிய குழுவில் பேரிகையும் இடம்பெறுகிறது. கனகதப்பட்டை பல்லியத்தில் இசைக்கப்படும் மற்ற கருவிகள் பெரிய தப்பட்டை, தாரா, கொம்பு சின்ன நாயனம் மற்றும் ஒத்துப் பேரிகையை பாண்டு அல்லது ட்ரம் செட் என்று இக்காலத்தில் இப்பகுதி மக்கள் அழைத்தாலும் அதன் முந்தைய பெயர் பேரிகை என்பதை கொங்கு நாட்டுப்புற இசைக்கருவிகள் நூல் மிகத் தெளிவாக காட்டுகிறது. கொங்கு திருமண மங்கல வாழ்த்து பாடுதல் எனும் சடங்கில் பாட்டின் நடுவே தொம்.. தொம்... என்று இந்த பல்லியம் ஒலிக்கும் கொங்கு நாட்டில் கருப்பணசாமி ஆட்டம் சிலம்பாட்டம் புலி வேஷம் ஆகிய ஆட்ட வகைகளிலும் பேரிகை இசைக்கப்படும். காரமடை அரங்கநாதர் கோவில் மற்றும் பழனி முருகன் கோவில் விழாக்களில் மக்களின் இசையாக ஒலிக்கும் திடும் இசையுடன் பேரிகை முழக்கப்படும்

ஊரில் விடும் பறைத் துடைவை உணவுரிமையாக்கொண்டு

சார்பில் வரும் தொழில் செய்வார் தலை நின்றார் தொண்டினால்

கூரிலைய முக் குடுமிப் படை அண்ணல் கோயில் தொறும்

பேரிகை முதலாய முகக் கருவி பிறவினுக்கும்................................ (பெரியபுராணம்;12.1053)

என்று திருமுறை விளக்குகிறது

## மத்தளம்

இந்தியாவின் மத்தள இசை கருவிகளில் புகழ்பெற்றது தோலக் எனப்படும் மத்தளம் நடுவில் பருமனாகவும் விளிம்பில் சிறியதாகவும் இருக்கும் உருளை வடிவ தோற்றம் கொண்டது இந்த மத்தளம் ஆகும். பல வகையால் செய்யப்பட்ட தோலக்கில் இருக்கும் இரண்டு வளையங்கள் மேலும் தோள் இழுத்து கட்டப்பட்டிருக்கும். மத்தளத்தின் சுருதியை மாற்ற இரண்டு மத்தள தலைகளை (Drumhead) இணைக்கும் கயிறை மாற்றி அமைக்க வேண்டும். இக்கருவி இரண்டு கைகளால் இசைக்கப்படுகிறது இனிமையாதல் மதங்கம் எனும் சொல் மிருதங்கம் என வடமொழியில் மாறி அமைந்தது

மத்தளி ஒன்றுள தாளம் இரண்டுள

அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்

அத்துள்ளெ வாழும் அரசன் புறப்பட்டால்

மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே..............................(திருமூலர்:10.189)

என்று பத்தாம் திருமுறை விளக்குகிறது

## முரசு

முரசு ஒரு தாள இசைக்கருவி அதாவது அடிப்பதால் எழும் ஒலியை கொண்டது. ஜால்ராக்களும் கோவில் மணிகளும் கூட தாளயிசை இசைக்கருவிகளே மரக்கட்டை கூட தாளமிட ஏதுவாகும்.

இந்த இசைக்கருவி தமிழ்நாட்டில் மன்னர்கள் காலத்தில் வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

வீர முரசு

தியாக முரசு

நியாய முரசு

மேற்கண்ட வகைகளில் முரசு உண்டு எனலாம்.

வீர முரசு

இது போர்க்காலங்களில் பயன்படுத்தப்படுவது போருக்குச் செல்லும் முன்னும் போர் நடக்கும் போதும் போர் முடிந்த பின்பும் முரசு கொட்டுதல் அக்கால வழக்கம் இந்த முரசிலிருந்து வெளிவரும் ஒளி வீர உணர்வினை தோற்றுவிப்பதாக இருக்கும் இந்த முரசு வைப்பதற்காகவே உயரமான இடத்தில் தனி மேடை ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் இந்த மேடையை முரசு கட்டில் என்று சொல்வார்

## தியாக முரசு

இது பொருள்களை அன்பளிப்பாக அளிக்க விரும்புபவர்கள் வறியவர்களை வரவேற்க அமைக்கப்பட்ட முரசு இதுவாகும்

## நியாய முரசு

நீதி வழங்கும் காலங்களில் நியாயம் கேட்க விரும்புபவர்களை அழைக்க அமைக்கப்பட்ட முரசு இது மனுநீதிச் சோழன் அரண்மனை முற்றத்தில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணி இது போன்றது

முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய

பரசமர் படையுடை யீரே

பரசமர் படையுடை யீருமைப் பரவுவார்

அரசர்கள் உலகில்ஆ வாரே........................ (திருஞானசம்பந்தர்: 3.99.1)

என்று தேவாரம் மூன்றாம் திருமுறை பகர்கிறது.

## முரவம்

முரகம் என்பது பழந்தமிழர் பயன்படுத்திய ஒரு வகை இசைக்கருவி ஆகும் இது பற்றிய குறிப்பு திருமுறைகளின் வழி அறியலாம்

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி

அரவஞ்செய முரவம்படும் அண்ணாமலை யண்ணல்

உரவஞ்சடை யுலவும்புனல் உடனாவதும் ஓரார்
குரவங்கமழ் நறுமென்குழல் உமைபுல்குதல் குணமே.......... (திருஞானசம்பந்தர்: 1.10.5)
என்று முதல் திருமுறை முரவம் பற்றி எடுத்துக்காட்டுகிறது.

## முருகியம்

பிரசம் திகழும் வரைபுரை யானையின் பீடழித்தார்
முரசம் திகழும் முருகியம் நீங்கும் எவர்க்குமுன்னாம்
அர(சு)அம் பலத்துநின்(று) ஆடும் பிரானருள் பெற்றவரின்
புரைசந்த மேகலை யாய்துயர் தீரப் புகுந்துநின்றே................... (மாணிக்கவாசகர்:8.299)
என்றும் மாணிக்கவாசகர் எட்டாம் திருமுறையில் முருகியம் பற்றி புலப்படுத்துகிறார்

## வட்டணை

வட்டணை என்பது ஓர் இசைக்கருவியாகும்.
கொட்டமுழ விட்டவடி வட்டணைகள் கட்டநட மாடிகுலவும்
பட்டநுதல் கட்டுமலர் மட்டுமலி பாவையொடு மேவுபதிதான்
வட்டமதி தட்டுபொழி லுட்டமது வாய்மைவழு வாதமொழியார்
சட்டகலை எட்டுமரு வெட்டும்வளர் தத்தைபயில் ...... (திருஞானசம்பந்தர் 3.75.4)
என்று மூன்றாம் திருமுறை பாடல்கள் வழி அறியலாம்.

## முடிவுரை

தேவாரப் பாடல்கள் தமிழர் சமய, இசை, கலை மற்றும் பண்பாட்டு வரலாற்றின் செழுமையான ஆவணங்களாக விளங்குகின்றன. இவ்வாய்வின் மூலம் தேவாரப் பதிகங்களில் இடம்பெறும் பல்வேறு இசைக்கருவிகள் தமிழர் இசை மரபின் தொன்மையையும் அதன் வளர்ச்சிப் பாதையையும் வெளிப்படுத்துகின்றன என்பது தெளிவாகிறது. யாழ், முழவு, முரசு, குழல், தாளம், தக்கை, துந்துபி, பேரிகை, கொம்பு, சங்கு போன்ற கருவிகள் வெறும் இசைக்கருவிகளாக மட்டும் அல்லாது, அக்கால மக்களின் சமயச் சடங்குகள், கோவில் வழிபாடுகள், திருவிழாக்கள், நாட்டிய நிகழ்வுகள் மற்றும் சமூக வாழ்வியலோடும் நெருங்கிய தொடர்புடையவையாக இருந்தன. தேவார மூவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோரின் பாடல்களில் இசைக்கருவிகள் குறித்த குறிப்புகள் மிகுந்த இசை உணர்வுடனும் பக்தி உணர்வுடனும் இடம்பெற்றுள்ளன. இக்குறிப்புகள் மூலம் கோவில் மையமாக உருவான இசைப் பண்பாடு தமிழ்ச் சமூகத்தில் எவ்வளவு முக்கிய இடம் பெற்றிருந்தது என்பதை அறிய முடிகிறது. மேலும், தோல் கருவிகள், காற்றுக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் போன்ற இசைக்கருவி வகைப்பாடுகள் தமிழர் இசை அறிவியலின் மேம்பட்ட நிலையையும் காட்டுகின்றன. தொல்காப்பியம் முதல் திருமுறைகள் வரை தொடர்ச்சியாக இசை பற்றிய செய்திகள் இடம்பெறுவது தமிழிசையின் நீண்ட பாரம்பரியத்தை உறுதிப்படுத்துகிறது. இசை என்பது தமிழரின் ஆன்மீக அனுபவத்திற்கும் சமூக வாழ்விற்கும் இன்றியமையாத கூறாக இருந்ததையும் இவ்வாய்வு நிறுவுகிறது. குறிப்பாக, தேவார இலக்கியங்கள் இசை வரலாறு, கோவில் இசை மரபு மற்றும் தமிழர் பண்பாட்டு அடையாளங்களை அறிய முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. எனவே, தேவாரப்பாடல்களில் இடம்பெறும் இசைக்கருவிகள் குறித்த ஆய்வு தமிழிசையின் தொன்மையையும் தமிழர் பண்பாட்டு செல்வத்தையும் அறிய உதவும் முக்கியமான ஆய்வுத்துறையாகும். இவ்வாய்வு எதிர்காலத்தில் தமிழிசை, கோவில் இசை மரபு, நாட்டுப்புற இசைக்கருவிகள் மற்றும் சமயக் கலை மரபுகள் தொடர்பான மேலாய்வுகளுக்கு வலுவான அடித்தளமாக அமையும்.

## References

Arunaasalam, M. (1975) Thirunaanasambanthar, Gandhi Vithyaalayam.

Arunaasalam, M. (1976) Thirunaavukkarasar, Gandhi Vithyaalayam.

Arunaasalam, M. (1977) Sundaramoorthy Naayanaar, Gandhi Vithyaalayam

Ilambooranar. (2003) Tholkaappiyam (Ilambooranar Urai), New Century Book House (Pvt) Ltd, Chennai

Suppiramaniya Muthaliyaar, (2008) Periyapuraanam, Saiva Siththaantha Noorpathippuk Kalakam, Chennai

Tharumapura Aatheenam. (2015) Panniru Thirumurai Varalaaru. Tharumapura Aatheenam.

Vaengkadasaami, (1960) Thamizhar Valarththa Alakuk Kalaigal, Paari Nilaiyam, Chennai

Vaengkadasaami, (2007) Samayangkal Valarththa Thamizh. Naam Thamizhar Pathippakam

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

K. Varusakkani, F. Vincent Rajasekar, The Musical Heritage of the Tavaram: An Analysis of Traditional Tamil Instruments, Indian Journal of Tamil, 6(1), (2024) 19-28. https://doi.org/10.54392/ijot2623